

ஆசிரியரிடமிருந்து........!

# விசுவாசத்தினால் தடைகளை மேற்கொள்ளுங்கள்

விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது. எபிரெயர் 11:30

கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவன் வாக்குப்பண்ணின பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கும் தேவ ஜனங்களுக்கும் நடுவே எரிகோ கோட்டை தடையாக நின்றது. எரிகோ பெரிதும் ஜெயிக்க முடியாதது போலும் காணப்பட்டது. இன்றும் நம் வாழ்வில் தேவன் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களையும் திட்டங்களையும் அடைய முடியாதபடி தடைகளைச் சத்துருக் கொண்டு வரலாம். குடும்ப பிரச்சனைகள், பொருளாதார பிரச்சனைகள், சரீர பலவீனங்கள், பாவ சோதனைகள் போன்ற தடைகள் நம் முன் நிற்கலாம். அவைகளை விசுவாசத்தின் மூலம் மேற்கொள்ள முடியும் என வேதம் கூறுகிறது. யோசுவா 5,6 அதிகாரங்களிலிருந்து விசுவாசத்தினால் தடைகளை அகற்றவும், மேற்கொள்ளவும் வேதம் கூறும் 5 ஆலோசனைகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

**1. விசுவாசத்தின் அதிபதி (CAPTAIN OF FAITH)** (யோசுவா 5:13-15)

தேவ ஜனங்கள் யோர்தானை கடந்து வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரிக்க ஆயத்தப்படுத்தும் போது எரிகோ என்ற பட்டணம் பெரிய தடையாக முன் நின்றது. யோசுவா இந்த பிரச்சனையை சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று உருவின பட்டயம் ஏந்திய ஒருவர் அவன் எதிரே வந்து நின்றார். யோசுவா அவரை முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டான். யோசுவாவுக்கு காட்சியளித்த இவர் கர்த்தராகிய தேவன். யோசுவா எரிகோவை பார்த்து திகைத்து கொண்டிருந்த வேளையில் அவன் கண்கள் சேனையின் அதிபராகிய கர்த்தரை நோக்கியது. ஆம். நம்முடைய கண்களை தேவன் மேல் வைப்போம். தடைகளையும், பிரச்சனைகளையும் பெரிதுப்படுத்தாமல், விசுவாசத்தை துவக்குபவரும் முடிப்பவருமாகிய தேவன் மேல் நம் கண்கள் இருக்கட்டும் (எபி.12:1). உங்கள் பிரச்சனையை பெரிதுபடுத்தாமல், அதைக் குறித்தே சிந்தித்துக்கொண்டிருக்காமல், உங்கள் பிரச்சனைகளை காட்டிலும் தேவன் பெரியவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவர் சொல்வதை கேட்க ஆயத்தமாயிருங்கள்(வச.14). அவர் ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்பவர். அவரை ஆராதியுங்கள். உங்கள் விசுவாசம் வளருவதை காண்பீர்கள்!

**2.விசுவாசத்தின் கீழ்ப்படிதல் (COMPLIANCE OF FAITH)** (யோசு. 6:1-5)

அடுத்ததாக, விசுவாசத்தின் கீழ்ப்படிதலை யோசுவா 6:1-5 வசனங்களில் காண்கிறோம். இங்கு கர்த்தர் யோசுவாவுக்கு சில வெற்றி

பெறுவதற்கான சில ஆலோசனைகளைக் கொடுக்கிறார். இந்த ஆலோசனைகள் மிகவும் வினோதமாக இருக்கிறது. படை தளபதியான யோசுவாவுக்கு இது முட்டாள் தனமாக தோன்றியிருக்கும். தேவன் இங்கு எரிகோவை மேற்கொள்ள பள்ளத்தாக்குகளையோ சுரங்கப்பாதைகளையோ வெட்டச் சொல்லவில்லை. குண்டு போட்டு தகர்க்கவும் சொல்லவில்லை. எரிகோ கோட்டையை சும்மா ஏழு நாட்கள் சுற்றி வாருங்கள், அது இடிந்து விழும் என்று கூறுகிறார். மனிதனின் பார்வைக்கு இது விசித்திரமாக இருக்கிறது. ஆனால் தேவன் தரும் ஜெயத்தை பெறுவதற்கு அவரின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம். நம்முடைய வழிகள் அவருடைய வழிகளல்ல (ஏசாயா 55:8). விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் (ஆபகூக் 2:4). முழுமையான, கேள்விக் கேட்காத கீழ்ப்படிதலை தேவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார். தேவ சத்தம் கேட்டு, அனுதினமும் அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறீர்களா? அப்படியானால், நிச்சயம் தேவன் உங்களுக்கு ஜெயம் தருவார்.

### 3. விசுவாசத்தின் விடாமுயற்சி (CONTINUANCE OF FAITH) (யோசுவா 6:10-15)

நம்முடைய கண்கள் விசுவாசத்தை துவக்குகிற இயேசுவின் மேல் இருக்க வேண்டும். அவரது சத்தம் கேட்டு கீழ்படிய வேண்டும். ஏனெனில் கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்று வேதம் கூறுகிறது (யாக்.2:20). மூன்றாவதாக, விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். யோசுவா 6:10-15 வசனங்களில் அவர்கள் தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருந்தார்கள். முதல் நாள் ஒன்றும் நடைபெறவில்லை. இரண்டாம், மூன்றாம்... ஆறாம் நாள் வரை சுற்றியும் ஒன்றும் நடைபெறவில்லை, சிலர் யோசித்திருக்கலாம். ஐயோ, போதும் எனக்கு இனிமேல் முடியாது என்று. தேவ ஜனமே, அவர்கள் ஆறுநாள் சுற்றி சோர்ந்து போயிருப்பார்களானால் ஒன்றும் நடந்திருக்காது. தேவன் அவர்களுக்கு பொறுமையை, கர்த்தருக்குக் காத்திருத்தலை கற்றுக் கொடுக்கிறார். கர்த்தருக்குக் காத்திருக்கிற நேரம் வீணானது அல்ல. விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசாயா 28:16). அவருக்கு காத்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள் (ஏசாயா 30:18). அவருக்கு காத்திருக்கிறவர்கள் புதுப் பெலன் அடைவார்கள் (ஏசாயா 40:31) என்று வேதம் கூறுகிறது. இதை வாசிக்கிற நீங்கள் சோர்ந்து போய் இப்போது உட்கார்ந்திருக்கலாம். தேவப் பிள்ளையே, விட்டு விடாதே, தொடர்ந்து தேவன் சொன்னதை செய்து கொண்டிரு. சோர்ந்து போகாதே. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றக்காலத்தில் அறுப்போம் என்று வேதம் கூறுகிறது (கலா. 6:9).

### 4. விசுவாசத்தின் வார்த்தை (CONFESSION OF FAITH) (யோசுவா 6:16)

எரிகோ கோட்டை இடிந்து விழுவதற்கு முன்பே, கர்த்தர் பட்டணத்தை உங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் என்று யோசுவா கூறுகிறான் (யோசுவா 6:16). ஏன் இப்படி சொன்னான் தெரியுமா? யோசுவா 6:2ல் எரிகோவை உன் கையில் ஒப்புக் கொடுத்தேன் என்று கர்த்தர் சொல்லியிருந்தார். ஆகவே விசுவாசம் என்றால் என்ன? கர்த்தர் சொன்னதை அறிக்கை செய்வது. கர்த்தர் சொன்னதை அப்படியே நம்புவது (யோவான் 4:50). எபிரெயர் 13:5,6 யை பாருங்கள். அங்கு கூறப்பட்டுள்ள ஒரு காரியம் நம் விசுவாசத்தை வளரச் செய்யும். "நீங்கள் பண ஆசையில்லாத வர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.'' இந்த வசனத்தில் ''சொல்லியிருக்கிறாரே''என்ற வார்த்தையை கோடிட்டு கொள்ளுங்கள். இப்பொழுது அடுத்த வசனத்தில், "அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர் என்று சொல்லலாமே" என்று கூறப்பட்டுள்ளது. இப்பொழுது இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் "அவர்

சொல்லியிருக்கிறார் … நாம் தைரியங்கொண்டு சொல்லலாமே." இதுதான் விசுவாச அறிக்கை. அவர் சொன்னதை தைரியமாக விசுவாசத்தோடு சொல்ல வேண்டும்.

**5. விசுவாசத்தின் வெற்றி (CONQUEST OF FAITH) (யோசுவா 6:20)**

இறுதியாக, "எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; மகா ஆராவாரத்தோடே முழங்குகையில், அலங்கம் இடிந்து விழுந்தது." ஜனங்கள் பட்டணத்தை பிடித்தார்கள். ஆம் பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தரை நோக்கி பார்த்து, தேவ சத்தம் கேட்டு, அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவர் சொன்னபடி செய்தால், உங்கள் முன்பாக நிற்கும் எரிகோக்கள் இடிந்து விழும். உங்கள் முன் நிற்பது எப்படிப்பட்ட தடையாக இருந்தாலும் தேவன் அதை அகற்றுவார்.

தேவ ஜனமே, உங்கள் முன் நிற்கும் தடைகள் பெரிதும் மேற்கொள்ள முடியாதது போலும் இருக்கிறதா?கவலைப்படாதீர்கள்! தேவன் மேலும் அவருடைய வார்த்தை மேலுமுள்ள உங்கள் விசுவாசம் தடைகளை தகர்த்து போடும். நீங்கள் விசுவாசித்தால் நிச்சயம் தேவனுடைய மகிமையை காண்பீர்கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.

---

## தாய்மார்கள் தினம்
மே 13, ஞாயிறு




## தகப்பனார்கள் தினம்
ஜூன் 17, ஞாயிறு




**தமிழ் பிரதேசத்திலுள்ள அனைத்து தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்!**

---




## பெந்தெகொஸ்தே நாள்
மே 20, ஞாயிறு

**திருச்சபை விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொண்டு தேவனுக்காக பிரகாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.**